# இலங்கை வந்த அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் முக்கியச் சந்திப்பு!

## ஒத்துழைப்புகளை மேம்படுத்தலாம் என எதிர்பார்ப்பு




உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள அமெரிக்காவின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்.வர்மா இன்று காலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு, பாதுகாப்பு மற்றும் தொழிநுட்பம் உள்ளிட்ட முழு அளவிலான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க இந்தியா மற்றும் மாலைதீவுக்குச் சென்ற ரிச்சர்ட் ஆர்.வர்மா, அதன் ஒரு பகுதியாக இலங்கைக்கும் விஜயம் செய்துள்ளார்.

கொழும்பில் மூத்த அதிகாரிகளுடன் அவர் மேற்கொள்ளும் சந்திப்புகள் அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை அமெரிக்காவின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் ரிச்சர்ட் ஆர்.வர்மா பார்வையிடுவார் எனவும் தெரியவருகிறது.

கொழும்பை ஒரு பிராந்திய கப்பல் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கு 553 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதன் மூலம் இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)


மாலைக்கதிர்
Maalaikkathir






சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 11 வெள்ளிக்கிழமை 23.02.2024 கதிர் 188


## ரின் இலக்கங்களை வழங்குவதற்கு புதிய நடைமுறைக்கு யோசனை!

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

தனிநபர் வரிக்கோவைக்கான ரின் இலக்கத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய யோசனை ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளை 2➤

## மக்கள் பொருளாதார நெருக்கடியில் அவதிப்படுகையில் மத்திய வங்கி ஊழியர் சம்பளம் 70 வீதத்தால் அதிகரிப்பு

### நியாயமற்ற செயல் என்கிறார் எஸ். எம்.மரிக்கார் எம்.பி.

மத்திய வங்கி ஊழியர் ஒருவரின் சம்பளம் 70 வீதத்தால் அதிகரிக்கப்படுமாயின், அரசாங்க ஊழியர்களின் சம்பளமும் 70 வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும். நாட்டு மக்கள் பொருளாதார அழுத்தத்தில் அவதிப்படும் நிலையில், இவ்வாறு மத்திய வங்கியானது தனது அதிகாரிகளின் சம்பளத்தை மாத்திரம் அதிகரிப்பது நியாயமற்ற செயல் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 2➤

## சிறீதரன் எம்.பியின் கிளிநொச்சி அலுவலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கலந்துரையாடல்



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கலந்துரையாடல் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இன்று இடம்பெறுகிறது.

கிளிநொச்சியில் சிவஞானம் சிறீதரனின் கட்சி அலுவலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சாணக்கியன் இருவரும் பங்கேற்கவில்லை எனவும், அவர்கள் தவிர்ந்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டுள்ளனர் என்றும் தெரிய வருகிறது.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் தமிழரசுக்கட்சியின் 2➤

## கொழும்பு தேசிய வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளரை ஒவ்வொருவரின் தேவைக்கேற்ப பதவி விலக்க முடியாது!

### அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க கொழும்புக் கிளை தெரிவிப்பு

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லனவை, பல்வேறு நபர்களின் தேவைகளுக்கு இணங்க பதவியிலிருந்து நீக்க முடியாது எனவும், அவரை நீக்க வேண்டுமாயின் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கொழும்பு தேசிய வைத்தியசாலை கிளையின் தலைவர் மருத்துவர் தர்ஷன சிறிசேன தெரிவித்துள்ளார்.

ருக்ஷான் பெல்லன தமது சங்கத்தில் உறுப்பினராக இல்லாத போதிலும், எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதில் ஒரு நியாயம் இருக்க வேண்டும் என்பதே தமது கருத்தாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தமது சங்கம் நேற்று (22ஆம் திகதி) கூடிய போது ருக்ஷான் பெல்லனவுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டதாகவும் மருத்துவர் தர்ஷன சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (ரெப-54)



# நகைத் திருட்டில் ஈடுபட்ட 2 பெண்கள் யாழில் கைது!

யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழாவில் நகைத் திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டனர்.

கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா இன்று காலை இடம்பெற்ற போது பெருமளவான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்தனர். இதனை சாதகமாக பயன்படுத்தி நகைத் திருட்டில் ஈடுபட்ட கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களே கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் விசாந்தவின் கீழ் இயங்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து நான்கரைப் பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. விசாரணைகளின் பின்னர் இருவரையும் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (01)

# யாழ்ப்பாணம் கொட்டடி சனசமூக நிலைய பவள விழாவுக்காக சீனிவாசகம் வீதி தடை!

யாழ் கொட்டடி சனசமூக நிலைய பவளவிழா நிகழ்வானது நாளை 24 ஆம் திகதி சனிக்கிழமை சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளதால், 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணிவரை சீனிவாசகம் வீதியில் வீதித்தடை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வீதியை பாவனைக்குட்படுத்தும் கனரகவாகனங்கள், பாரவூர்திகள் மற்றும் இதர வாகனங்கள் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணிவரை குறித்த தினத்தில் இவ் வீதிக்குள் உள்நுழைவதும், வெளிச்செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

எனினும் குறித்த வீதியூடாக பொதுமக்களுக்கு இடையூறு இல்லாத வகையில் வாகனங்கள் பயணிக்க முடியும் என்பதையும் சனசமூக நிலையம் தெரிவிக்கின்றது.

## நெத்தலி ஆறு முத்துமாரியம்மன் வருடாந்த மாசி மக தேர்த்திருவிழா

கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் நெத்தலி ஆறு பகுதியில் அமைந்து அடியார்களுக்கு எல்லாம் அருள் பாலித்து வரும் நெத்தலி ஆறு முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மாசி மக தேர் திருவிழா இன்றைய தினம் ஆலய குரு முதல்வர் ஸ்ரீ காந்தன் குருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

## கொழும்பில் பல மருந்தகங்கள் பொலிஸாரால் சுற்றி வளைப்பு

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு மருந்துச் சீட்டு இல்லாமல் அதிக அளவு மருந்துகளை விற்பனை செய்யும் மருந்தகங்களைச் சோதனையிடும் நடவடிக்கை "யுக்திய" திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏராளமான போதைப்பொருள் விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, நாடு முழுவதும் போதைப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் தமக்கு போதை ஊட்டக்கூடிய மருந்து வகைகளை மருந்தகங்களில் வாங்கும் வழக்கம் அதிகரித்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இதன் காரணமாகவே போதை உணர்வை ஊட்டக்கூடிய மருந்து வகைகளை விற்பனை செய்யும் மருந்தகங்களை சோதனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மருந்தகங்களை கண்டறிவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையாக கடந்த 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் மேல் மாகாணத்தை மையமாக கொண்டு பொலிஸாரும், மருந்துக் கட்டுப்பாட்டு அதிகார சபையினரும் இணைந்து சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது போதை பாவனையாளர்களுக்கு மருந்துச் சீட்டு இல்லாமல் போதையூட்டக்கூடிய அதிகளவு மருந்து வகைகளை விற்பனை செய்த 8 பேரை பொலிஸார் கைது செய்தனர். மேற்படி மருந்தகங்களிலிருந்து 10,287 போதையூட்டக்கூடிய மாத்திரைகள் கைப்பற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ரெப-56)

## எதிர்பார்த்ததையும் விட பணவீக்கம் அதிகரிக்கும்!

விரைவில் பணவீக்கமானது கணக்கிடப்பட்ட இலக்கு அளவை விட உயரும் என எதிர்பார்க்கப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. முக்கியமாக சமீபத்திய வரிச் சீர்திருத்தம் மற்றும் விநியோகத்துறை இடையூறுகள் காரணமாக, பணவீக்கம் எதிர்பார்த்த அளவை விட எதிர்வரும் காலத்தில் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. இருப்பினும் இடைப்பட்ட காலத்தில் பணவீக்கம் 5 சதவீத இலக்கு நிலைக்கு அருகில் நிலையானதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் குறைந்த கேள்விகள் காரணமாக பணவீக்க அதிகரிப்பு நீண்ட காலத்திற்கு தொடராது எனவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஜனவரியில் தேசிய நுகர்வோர் விலைக் குறியீட்டின் படி, பணவீக்கம் 6.5 சதவீதமாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெப-55)

## நல்லூரில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் பஸ்ஸின் மிதி பலகையில் இருந்து இறங்க முற்பட்ட ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து பணியாற்றும் முல்லைத்தீவு, ஒட்டிசுட்டானைச் சேர்ந்த ஏ.நிஷாந்தன் என்ற 29 வயதான இளைஞரே சாவடைந்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக இன்று காலை இந்த விபத்து இடம்பெற்றது.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## சிறீதரன் எம்.பியின் கிளிநொச்சி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளுக்கு எதிராக யாழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த பீட்டர் இளஞ்செழியன் பங்கேற்றுள்ளதாகவும், அதேவேளை திருகோணமலை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்த சந்திரசேகரம் பரா என்பவர் கலந்து கொள்ளவில்லை என்றும் அறியக்கிடைத்துள்ளது. (04)

## மக்கள் பொருளாதார .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்போம் என்று கூறிய மத்திய வங்கி தமது ஊழியர்களின் சம்பளத்தை மாத்திரம் 70 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த சம்பள அதிகரிப்பின் படி மத்திய வங்கியின் அலுவலக உதவியாளர் ஒருவரின் சம்பளம் சுமார் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ஆகும்.

அரசாங்கமானது அரச ஊழியர்களுக்கு வழங்குகின்ற சம்பள அதிகரிப்பு வெறும் ரூ 10,000 ஆகும், அதுவும் கூட ரூ.10,000 இரண்டு கட்டங்களாகவே வழங்கப்படுகின்றது. இவ்வாறு நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், மத்திய வங்கியின் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளின் சம்பளம் 70 ஆல் அதிகரிக்கப்படுவது நியாயமற்றது.

மத்திய வங்கியின் ஆளுநர் இந்த முடிவை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டின் பொருளாதார அழுத்தத்தால் நசுக்கப்படும் மக்கள் இந்த அநீதியான செயலுக்கு எதிராக அணி திரள்வார்கள்.

தற்போதைய அரசாங்கம் நாட்டை ஆளத் தகுதியற்றது. நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்ற ஆர்வமும் இந்த அரசாங்கத்திற்கு கிடையாது. நாட்டின் பொருளாதாரத்தை சரி செய்ய வேண்டிய தேவையும் தற்போதைய அரசுக்கு இல்லை. ஒரு நாட்டின் அரச வருமானம் என்பது வரியினால் பெறப்படுவதல்ல, ஆனால் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமோ வருமானத்தை ஈட்டும் ஒரே வழி வரி அறவிடல் மட்டுமே என்ற தவறான கொள்கையை பின்பற்றுகின்றது.

அந்நிய நேரடி முதலீட்டை கொண்டு வர வேண்டும் என்ற அவசியமோ, ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டிய அவசியமோ, சுற்றுலாத்துறை மூலம் புதிய சந்தைப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கமோ இந்த அரசாங்கத்திடம் இல்லை.

தேயிலை, தேங்காய் மற்றும் இறப்பர் உற்பத்தி மூலம் வருடாந்தம் 2300 மில்லியன் டொலர்கள் வருமானமாக ஈட்டப்படுகின்ற அதேவேளை, ரணசிங்க பிரேமதாசவினால் நிறுவப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளுக்குப் பின்னர் இலங்கை எந்தவொரு புதிய சந்தையிலும் பிரவேசிக்கவில்லை.

தகவல் தொழிநுட்பச் சந்தை மற்றும் நிதி முதலீட்டு வலயங்களுக்குள் இலங்கை சரியாகப் பிரவேசிக்கவில்லை. அரச வருமானத்தை டொலர் கணக்கில் அதிகரிப்பதன் மூலம் மட்டுமே வரிகளைக் குறைக்க முடியும். அவ்வாறு வரி குறைவடையும் போது பொருட்களின் விலையைக் குறைக்கக் கூடியதாக அமையும். ஆனால், அத்தகைய பரந்துபட்ட பார்வை இந்த அரசாங்கத்திடம் கிடையாது" என்றார் அவர். (ரெப-53)

## ரின் இலக்கங்களை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குகையில் அந்த இலக்கத்தையே ரின் இலக்கமாக பயன்படுத்துவதற்கான அனுமதியைப் பரிந்துரைக்கும் அமைச்சரவை பத்திரம் தயாரிக்கப்படும், எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான பிரேரணை தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதற்காக 6 நிறுவனங்களிடம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளதாகவும் இதுவரை 4 நிறுவனங்கள் பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனை விடவும் மேலுமிரு நிறுவனங்களின் பரிந்துரைகளையும் பெற்றுக்கொள்ள உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



# உலக வாய் சுகாதாரத் தினத்தை முன்னிட்டு கல்முனையில் பற்சிகிச்சை முகாம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

ஆண்டுதோறும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வரும் உலக வாய் சுகாதார தினத்தினை முன்னிட்டு அதற்கு முன் உள்ள மாதத்தினையும் பின்னுள்ள மாதத்தினையும் தேசிய வாய் சுகாதார விழிப்புணர்வு மாதங்களாக பிரகடனப்படுத்தி, பல்வேறு வேலை திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன.

சுகாதார அமைச்சின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை இலங்கை பற்சிகிச்சை சங்கத்தோடு இணைந்து "மகிழ்ச்சியான வாய் ஆரோக்கியமான உடல்" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்த பற்சிகிச்சை மருத்துவ முகாமும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வும் இன்று (23) பெரியநீலாவணை ஆயுர்வேத வைத்தியசாலையில் பிராந்திய வாய் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.எம்.சறூக் தலைமையில் நடைபெற்றன.

இதன்போது பாடசாலை மாணவர்கள், பொதுமக்களுக்கு வாய் சுகாதாரம் தொடர்பில் விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டதுடன் மருத்துவ முகாமில் வாய் சுகாதாரம் பரிசோதனை செய்யப்பட்டு தேவையான பற்சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநி திருமதி. சகீலா இஸ்ஸடீன், இலங்கை பற்சிகிச்சை சங்கத்தின் கிழக்கு பிராந்திய தவிசாளர் வைத்தியர் கேதீஸன் உட்பட பல் வைத்திய அதிகாரிகள், பிராந்திய சுகாதார பணிமனையின் பிரிவுப் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# இறக்காமம் பள்ளிவாசலுக்கு நீர்த் தொட்டி கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் வழங்கியது



(எம்.ஏ.ஏ.அக்தார் )

இறக்காமம் மஸ்ஜிதுல் இக்றாம் பள்ளிவாசலுக்கு 1000 லீற்றர் நீர்க் கொள்ளளவைக் கொண்ட நீர்த் தொட்டி மற்றும் தண்ணீர் மோட்டார் தேவைப்பாடு இருந்து வந்த காரணத்தினால் இவற்றைப் பெற்றுத் தருமாறு பள்ளி நிருவாகிகள், முன்னாள் இறக்காமம் பிரதேச சபை உறுப்பினரான எம்.எல்.முஸ்மி ஊடாக ரஹ்மத் பவுண்டேசனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஒருங்கிணைப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் ஸ்தாபகரும், கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் அவர்களினால் மிகவும் குறுகிய நாட்களுக்குள் குறித்த நீர்த் தொட்டி மற்றும் தண்ணி மோட்டார் என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டு பள்ளிவாசல் நிருவாகிகளிடம் பாவனைக்காக கையளித்து வைக்கப்பட்டன.

இதன்போது பவுண்டேசன் உறுப்பினர்களுடன், பள்ளித் தலைவர் ஐ.எல்.அனீஸ், ஆலோசகர் வீ.ரீ. ஹுஸ்னி, எஸ்.என்.சிறாஜ் மற்றும் ஏனைய பள்ளிவாசல் நிருவாகிகள், ஸலாம் பள்ளித் தலைவர் ஏ.எச்.றபாஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் ஏ.றியாஸ் , வட்டார உறுப்பினர்களான ஏ.சஜாத், எஸ்.எம்.சியாம், ஏ.எல்.றாயிஸ், எஸ்.எல்.அறூஸ், என்.நிப்றாஸ், வை.பீ. பஹீஜ் உட்பட ஏனைய உறுப்பினர்கள், ஜமாஅத்தினர்கள், மஹல்லாவாசிகள், ஊர் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு நிதியுதவி



(ஹஸ்பர் ஏ.எச்)

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் கால்நடைகளை இழந்து பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கான நிதியுதவியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இரா ஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்,ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி மதநாயக்க உட்பட அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# கணேசாவில் கால்கோள் விழா

(வி.ரி. சகாதேவராஜா)

நாவிதன்வெளி கணேசா வித்தியாலயத்தில் 2024 ஆம் ஆண்டிற்கான தரம்-1 இற்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் வித்தியாரம்ப நிகழ்வானது புதிதாகக் கடமையேற்றுள்ள அதிபர் திருமதி கா.துரைலிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக வலுவூட்டப்பட்ட பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தர் சி.பிரதீஸ்வரன் கலந்து கொண்டார்.

அத்துடன் அப்பாடசாலையில் தரம்-9 வரை கற்று தரம்-10 இற்கு ஏனைய பாடசாலைக்கு கற்கச் செல்லும் மாணவர்களை வழியனுப்பும் நிகழ்வும் நடைபெற்றது.



# பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்துக்கு முதல் பெண் முதல்வராக மரியம் நவாஸ்!



பாகிஸ்தானில் 12 கோடி மக்கள் தொகை கொண்ட பஞ்சாப் மாகாணத்தின் முதல் பெண் முதல்வராக, முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் மகள் மரியம் நவாஸ் (50) பொறுப்பேற்கவிருப்பது உறுதியாகியுள்ளது.

அந்த நாட்டு நாடாளுமன்றத்துக்கு கடந்த 8 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது. அதனுடன் சேர்த்து பஞ்சாப், சிந்து, பலூசிஸ்தான், கைபர் பக்துன்கவா ஆகிய மாகாணப் பேரவைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

இவற்றில், முதல்முறையாக பஞ்சாப் மாகாணப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேரவையின் கூட்டத்துக்கு இன்று வெள்ளிக்கிழமை அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. பஞ்சாப் மாகாண ஆளுநர் பாலிகுர் ரஹ்மான் இதற்கான அழைப்பை விடுத்துள்ளார். அந்தக் கூட்டத்தில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பேரவை உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிறகு, புதிய அரசை அமைப்பதற்கான பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற பேரவைத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-நவாஸ் (பிஎம்எல்-என்) கட்சிக்கு அதிகபட்சமாக 137 இடங்கள் கிடைத்தன. முன்னாள் பிரதமரும் கிரிக்கெட் நட்சத்திரமுமான இம்ரான் கான் தலைமையிலான பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சியின் (பிடிஐ) ஆதரவு பெற்ற சுயேச்சை வேட்பாளர்கள் 116 இடங்களைக் கைப்பற்றி 2ஆவது இடத்தைப் பிடித்தனர். முன்னாள் பிரதமர் பேநசீர் புட்டோவின் மகனும், முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சருமான பிலாவல் புட்டோ ஸர்தாரியின் தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கு (பிபிபி) 10 இடங்கள் கிடைத்தன.


இந்தச் சூழலில், பிபிபி மற்றும் பிற கட்சிகளின் ஆதரவுடன் பிஎம்எல்-என் கட்சி புதிய அரசை அமைக்கவிருக்கிறது. அந்த அரசில், கட்சியின் முதுநிலை துணைத் தலைவர் மரியம் நவாஸ் முதல்வராகப் பதவியேற்கவிருக்கிறார். பஞ்சாப் மாகாணத்தின் முதல்வராக ஒரு பெண் பொறுப்பேற்கவிருப்பது இதுவே முதல்முறையாகும்.

பாகிஸ்தான் பிரதமராக 3 முறை பதவி வகித்த நவாஸ் ஷெரீபின் அரசியல் வாரிசாகக் கருதப்படும் மரியம் நவாஸ், ஏற்கெனவே மாகாணத் தேர்தலின்போது முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார்.

371 இடங்களைக் கொண்ட பஞ்சாப் மாகாணப் பேரவையில் ஆட்சியமைப்பதற்கு 186 எம்எல்ஏ-க்களின் ஆதரவு தேவை. ஏற்கெனவே பிஎம்எல்-என் மற்றும் பிபிபி கட்சிக்கு மொத்தம் 147 இடங்கள் கைவசம் உள்ள நிலையில், இம்ரான் கானின் பிடிஐ கட்சி ஆதரவு இல்லாமல் போட்டியிட்டு வெற்றி பெற்ற 20 க்கும் மேற்பட்ட சுயேச்சைகள் பிஎம்எல்-என் கட்சியில் இணைந்துள்ளனர். எனவே, பேரவையில் மிகப் பெரிய பலம் வாய்ந்த கூட்டணியாகத் திகழ்வதால் மரியம் நவாஸ் தலைமையில் அரசு அமைவது உறுதியாகியுள்ளது.

ஏற்கெனவே, மாகாண முதல்வர்களுக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு மரியம் நவாஸுக்கு அளிக்கப்படத் தொடங்கிவிட்டது. மாகாண உயரதிகாரிகளுடன் அவர் இப்போதே ஆலோசனையைத் தொடங்கிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (04)

# காஸா மக்களின் கடைசிப் புகலிடம் ராஃபா நகரில் மீண்டும் தாக்குதல்!



மோதலால் பாதிக்கப்பட்ட காஸா மக்களின் கடைசிப் புகலிடமாகத் திகழும் ராஃபா நகரில் இஸ்ரேல் ராணுவம் நேற்று வியாழக்கிழமையும் தீவிர குண்டுவீச்சை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து ஏஎஃப்பி செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியின் படி, காஸாவின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த ராஃபா நகரில் அண்மைக் காலமாக வான்வழித் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல் படையினர் புதன்கிழமை இரவு முழுவதும் அந்த நகரை குண்டுகளால் தாக்கியுள்ளனர். இதில் ஒரு மசூதி தரைமட்டமானது. ராஃபாவில் வியாழக்கிழமை காலையும் இஸ்ரேலின் குண்டுவீச்சு தொடர்ந்தது. இந்தத் தாக்குதல்களில் ஏராளமான கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன, என்று அறியமுடிகிறது.

இதற்கிடையே, காஸாவின் தெற்கு மற்றும் மத்திய பகுதிகளில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 48 பேர் உயிரிழந்ததாக அந்தப் பகுதி சுகாதாரத் துறை அமைச்சக அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை கூறினர்.

இத்துடன், காஸாவில் இஸ்ரேல் ராணுவம் கடந்த வருடம் ஒக்டோபர் 7 முதல் நடத்தி வரும் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 29,410 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காஸா பகுதியில் இஸ்ரேல் ராணுவம் சுமார் 4 மாதங்களாக வான்வழித் தாக்குதல் நடத்தி வருகிறது. குண்டுவீச்சிலிருந்து தப்பவேண்டுமானால், பொது மக்கள் வடக்கிலிருந்து வெளியேறி, தெற்குப் பகுதிக்கு செல்லவேண்டும் என்று இஸ்ரேல் ராணுவம் பொதுமக்களுக்கு உத்தரவிட்டது. அந்த உத்தரவை ஏற்று தங்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ள லட்சக்கணக்கான பலஸ்தீனர்கள் கடைசியாக தற்போது ராஃபா நகரில் தஞ்சமடைந்துள்ளனர்.

அவர்கள் தப்பிச் செல்வதற்கு பாதுகாப்பான வேறும் இடம் இல்லை என்ற சூழலில், அந்த நகரிலும் அண்மைக் காலமாக இஸ்ரேல் ராணுவம் தீவிர குண்டுவீச்சை நடத்தி வருகிறது. இதில், ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.

அத்துடன், விரைவில் அந்த நகருக்குள் தரைவழியாகவும் நுழைந்து தாக்குதல் நடத்தப் போவதாகக் கூறி இஸ்ரேல் அரசு அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறு தாக்குதல் நடத்தினால் அது மாபெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தும் என்று ஐக்கியநாடுகள் சபையும், அமெரிக்கா உள்ளிட்ட பிற நாடுகளும் எச்சரித்து வருகின்றன. (04)

# அகதிகளை அனுமதிப்பதற்கான சர்ச்சை ஒப்பந்தம் அல்பேனிய நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது!

சர்வதேச கடல் பகுதியிலிருந்து இத்தாலியால் மீட்கப்படும் அகதிகளை தங்கள் நாட்டு முகாம்களில் தங்கவைத் திருப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய ஒப்பந்தத்துக்கு அல்பேனிய நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

இடதுசாரி சோஷியலிஸ்ட் கட்சியைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இதற்கான வாக்கெடுப்பில் ஒப்பந்தத்துக்கு ஆதரவாக 77 வாக்குகள் பதிவாகின. எதிராக ஒரு வாக்குக் கூடப் பதிவாகவில்லை. எதிர்க்கட்சிகள் வாக்கெடுப்பைப் புறக்கணித்தன. அதையடுத்து, அந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் வழங்கங்கியதாக அறிவிக்கப்பட்டது.

அல்பேனிய பிரதமர் ஏதி ராமாவுக்கும், இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனிக்கும் இடையே கடந்த நவம்பர் மாதம் கையொப்பமான இந்த ஒப்பந்தத்தில், அடைக்கலம் தேடி ஐரோப்பிய நாடுகளை நோக்கி வரும் அகதிகள் நடுக்கடலில் மீட்கப்படும்போது, அவர்களுக்கு



சட்டபூர்வ அனுமதி கிடைக்கும்வரை அல்பேனியாவில் தங்கவைத்திருக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ், ஒரே நேரத்தில் 3,000 அகதிகள் வரை அல்பேனியாவுக்கு அனுப்பமுடியும். அந்த வகையில், ஓராண்டில் 36,000 அகதிகள் வரை அல்பேனியாவுக்குள் வருவார்கள். இதற்கு, வலதுசாரி எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. (04)



# தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு மதுரையில் நடத்துவதற்கு விஜய் திட்டம்!

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டினை மதுரையில் நடத்த விஜய் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஜெயலலிதா, கருணாநிதி மற்றும் தேமுதிக தலைவர் விஜயகாந்த் போன்றோர் மறைந்த பின்னர் தமிழக அரசியலில் புதிய தலைமைக்கான தேவை உருவான நிலையில், ரசிகர்களுக்காக விஜய் மக்கள் இயக்கம் என்ற அமைப்பை நிறுவி, மக்களுக்கு மருத்துவ முகாம், ரத்த தான முகாம், இரவுப் பாடசாலை, பொது நூலகம் அமைத்து கொடுத்து உதவி செய்து வந்த நடிகர் விஜய், தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் கட்சியை தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை அருகே பனையூரில் உள்ள அந்த கட்சியின் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் உள்கட்சிக் கட்டமைப்பு விரிவாக்கம் தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமும் நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாட்டை மதுரையில் வரும் ஏப்ரல் மாதம் நடத்த விஜய் திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. அதற்கு முன்பாக, கட்சி ரீதியாக 100 மாவட்டங்களை உருவாக்கி, நிர்வாகிகளை நியமித்த பின்னர் முதல் மாநாட்டை நடத்தவிருப்பதாகவும் கூறப்படுகிறது. (04)

# மாணவர்களின் மொழி ஆளுமை விருத்தி நோக்கில் தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் செயலமர்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

தம்பலகாமம்பிரதேச செயலகப்பகுதியை உள்ளடக்கிய தமிழ் பேசும் தெரிவு செய்யப்பட்ட மாணவ மாணவிகளுக்கான செயலமர்வொன்று பிரதேச செயலக மண்டபத்தில் இன்று (23) இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணாங்க குறித்த செயலமர்வு இடம்பெற்றது. இது, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச மட்ட இலக்கியப் போட்டியினை முன்னிட்டு, தமிழ்மொழி மூலமான மாணவர்களுக்கான தமிழ் இலக்கண இலக்கியத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாணவர்களின் மொழி ஆளுமை, தமிழ் இலக்கண உச்சரிப்பு, கட்டுரை ஆக்கம் எழுதுதல் உள்ளிட்ட பல திறன்களை வளர்ப்பது இச்செயலமர்வின் மூலமான வெளிப்பாடாக எதிர்பார்க்கப்படுகிறது.

இதில் வளவாளராக கிழக்குப்பல்கலைக்கழக தமிழ்க் கற்கைகள் துறை மாணவர் தி. முகிலன் கலந்து கொண்டார்.

இச்செயலமர்வின் ஒருங்கிணைப்பாளராக திருமதி பாக்கியராஜா மேனகா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், தம்பலகாமம்), மாணவ மாணவிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## சம்மாந்துறை ஜமாலியா பாடசாலைக்கு அச்சு உபகரணம் வழங்கி வைப்பு




(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

"ஒரு குடும்பத்திற்கு, ஒரு படித்தவர்" என உருவாக்கினால் மாத்திரமே ஊரில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களை உயர்த்த முடியும் எனும் நோக்கில் இயங்கி வரும் "Free for Education" திட்டத்தின் ஊடாக இன்று (23) சம்மாந்துறை கமு-சது- ஜமாலியா வித்தியாலையத்துக்கு தேவையாக கருதப்பட்ட பிரின்டர் உபகரணம் வழங்கப்பட்டது.

திட்டத்தின் உறுப்பினர்களால் பாடசாலை நிர்வாகத்திடம் அந்த உபகரணம் கையளிக்கப்பட்டது.

## ஓய்வு நிலை ஆசிரியை சனூனாவுக்கு பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு



(கே எ ஹமீட்)

அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஸஹ்ரா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக 19 வருடங்கள் சேவையாற்றி 32 வருடங்கள் ஆசிரியர் பணி செய்து தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்லும் திருமதி எஸ். சனூனாவுக்கான பிரியாவிடை வைபவமும் கௌரவமும் அண்மையில் வித்தியாலயத்தின் திறந்த வெளி அரங்கில் அதிபர் எம். எஸ்.எம். பைறூஸ் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர், பழைய மாணவப் பிரதிநிதிகள், தைக்கா நகர் அபிவிருத்தி மன்றத்தினர் இணைந்து கொண்டு குறித்த ஆசிரியருக்கு கௌரவங்களையும் வாழ்த்துக்களையும்பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் அதிபரினால் ஆசிரியரின் சேவை நலனைப் பாராட்டி வாழ்த்து பத்திரம் வாசித்து வழங்கப் பட்டதுடன் ஆசிரியர்களினால் அன்பளிப்பும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## சம்மாந்துறை தாஹிரா வித்தியாலயத்தில் புதிய வருடத்திற்கான ஏடு தொடக்கல்



(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை கல்வி வலய கமு-சது- தாஹிரா வித்தியாலயத்தில் புதிய வருடத்திற்கான ஏடு தொடங்கும் நிகழ்வு இன்று அப்பாடசாலையின் அதிபர் எம்.ஏ. ஆர். எம். முஸ்தபா தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவருமான எஸ்.எம் சபீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஏடு தொடங்கி வைத்தார்.


இப்பாடசாலையில் பல்லின மாணவர்கள் கல்வி பயில்வதோடு அங்குள்ள மாணவர்கள் தமிழ், சிங்கள மொழிகளில் கல்வி கற்பது மாத்திரமல்லாமல் சரளமாக இருமொழிகளிலும் பேசக்கூடியவர்களாக காணப்படுவதும் அங்கு குறிப்பிடப்பட்டது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை அதிகாரிகள், சம்மாந்துறை சூரா சபை மற்றும் பள்ளிவாசல்கள் சம்மேளன செயலாளர் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.



# அமைதிக்கான நோபல் பரிசுக்கு எலான் மஸ்க் பெயர் பரிந்துரைக்கவேண்டுமென நோர்வே எம்.பி. கோரிக்கை






2024 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசுக்கு எலான் மஸ்க் பெயரைப் பரிந்துரைக்க வேண்டுமென நோர்வே நாடாளுமன்ற உறுப்பினரான மரியஸ் நில்சன் கோரிக்கை முன் வைத்துள்ளார்.

டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைவரும் தொழிலதிபருமான எலான் மஸ்க், சமூக வலைத்தளமான டுவிட்டரை 2022 இல் வாங்கி, எக்ஸ் என நிறுவனப் பெயரை மாற்றம் செய்தார். சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்த இதனை செய்ததாக அவர் குறிப்பிட்டார். மேலும், ரஷியா- உக்ரைன் போரில் உக்ரைன் ராணுவத்துக்கு செயற்கைக்கோள் வழி தொடர்பினை அவரது நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவற்றுக்காக எலான் பெயரை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கலாம் என மரியஸ் தெரிவித்ததாக பொலிட்கோ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முற்போக்கு கட்சியை சேர்ந்த மரியஸ், வெளிப்படையான பேச்சு மற்றும் பல்வேறு தரப்பு வாதங்களையும் அனுமதிக்கும் எலான், டுவிட்டரை வாங்கி அதன் தணிக்கைக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகவும் சுதந்திர கருத்துரிமையை ஊக்குவிக்கும் செயலில் ஈடுபடுவதால் எலான் அமைதிக்கான நோபல் பரிசுக்குத் தகுதியானவர் எனவும் மரியஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னைய டுவிட்டர் நிர்வாகத்தில் முடக்கப்பட்டிருந்த முன்னாள் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உள்ளிட்டவர்களின் கணக்குகள் எலான் பொறுப்பேற்ற பின் தளர்வாக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (04)

# கை அசைவு - மூளை சமிக்ஞைகளை இணைத்து கணினியைக் கட்டுப்படுத்தும் புதிய நுட்பம்!

## உருவாகுவதாக மார்க் சகர்பேர்க் தகவல்

மனிதனின் மூளையில் ஏற்படும் மிக நுண்ணிய மின் சமிக்ஞைகள் மூலம் கணினியைக் கட்டுப்படுத்தும் கருவி ஒன்றை உருவாக்கிவருவதாக மார்க் சகர்பேர்க் தெரிவித்துள்ளார்.

தனது புதிய கருவியைப் பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்துள்ள அவர், இந்த கருவி மனிதனின் கை அசைவுகள் மற்றும் மூளை சமிக்ஞைகளை இணைத்து அதன் மூலம் கணினிச் சாதனங்களைப் பயன்படுத்தலாம் எனக் கூறுகிறார்.

இந்த நரம்பியல் தொழிநுட்பம் சார்ந்த ஆர்வம் புதிதல்ல. ஏற்கனவே எலான் மஸ்க்கின் நியூரோ லிங்க் எனும் நிறுவனம் இந்த வகையிலான தொழிநுட்பம் ஒன்றினை மனித மூளையில் பொருத்தி அதன் மூலம் கணினிகளைப் பயன்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறது.

அதுமட்டுமின்றி சிறிய கணினிச் சிப்பை, மனிதர் ஒருவரின் மூளையில் சத்திர சிகிச்சை மூலம் பொருத்தி, சோதனைகளில் வெற்றி கண்டுவருவதாகவும் அது தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மார்க், சத்திர சிகிச்சை ஏதுமின்றி - அணிந்துகொள்ளும் கருவியாக இந்த தொழிநுட்பத்தை உருவாக்குவதாகவும், இன்னும் 3 வருடங்களுக்குள் தனது புதிய கருவியை விற்பனைக்கு தயார் செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (04)










## யாழ் ஊடகவியலாளருக்கு இராணுவம் அச்சுறுத்தல்!



யாழ்ப்பாணம், பலாலி வசாவிளான் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள ஆலயங்களின் தற்காலிக வழிபாடு தொடர்பான செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு இராணுவத்தினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், பலாலி வசவிளான் பகுதியில் உயர்பாதுகாப்பு வலய இராணுவ குடியிருப்பிற்குள் உள்ள ஆலயங்களில் தற்காலிக வழிபாடுகளை மேற்கொள்வதற்கு பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் இன்று காலை 8 மணியளவில் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள ஆலயத்துக்குள் செல்வதற்காக பொதுமக்கள் பலாலி வீதிக்கு அருகில் அமைந்துள்ள வசவிளான் இராணுவ குடியிருப்பிற்கு முன்னால் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பகுதியில் குழுமியிருந்தனர். இதனை செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களான சுந்தரம்பிள்ளை ராஜேஸ்கரன், சின்னையா யோகேஸ்வரன்,பிரபாகரன் டிலக்சன், ஆகியோர் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டு அவர்களின் தொலைபேசியில் உள்ள காணொளிகளும் அழிக்கப்பட்டது.

விடுவிக்கப்பட்ட பகுதியில் வீதியோரமாக நின்றிருந்த பொதுமக்களையும், அவர்கள் ஆலயங்களுக்கு வழிபடுவதற்கு ஆயர்த்தமாவதையும் காணொளி பதிவுசெய்த ஊடகவியலாளர்கள் மீதே அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அம்பாறை மாவட்டத்திற்கு நீதி அமைச்சர் விஜயம்



(கே எ ஹமீட்)

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அம்பாறை மாவட்டத்திற்கான இரண்டு நாள் விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

குறித்த விஜயத்தின்போது அவர் தீகவாபி ரஜமஹா விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இன நல்லிணக்கம் தொடர்பான ழுரேசு வேலைத்திட்டத்தினை மீண்டும் மார்ச் மாதம் ஆரம்பிக்கவிருப்பதாக இவ்விஜயத்தின் போது அவர் குறிப்பிட்டிருந்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அனுராத ஜெயரத்னவும் இதன்போது கலந்துகொண்டதுடன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.ஜெகதீசன், அட்டாளச்சேனை பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஷாபிர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
GET IT ON Google Play
Download on the App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
jride
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
GET IT ON Google Play
Download on the App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!